இருக்கிறது. இரானுக்கும், ஆப்கானிஸ்தானத்திற்கும் ஏற்கெனவே ஒரு ஆய்வாளரை அனுப்பி பிராகூயி மொழியை ஆய ஏற்பாடு செய்துள்ளது. இத்தகைய பணிகளுக்கு ஏனைய தென்னக அரசாங்கங்களைப் போல் தமிழகஅரசும். மான்யம் வழங்க அவர்கள் விண்ணப்பம் செய்திருக்கின்றனர். இதற்காக ஆண்டொன்றுக்கு 1.36 இலட்சம் ஐந்தாண்டுகளுக்குத் தொடர் செலவாகவும், 4.51 இலட்சம் தொடராச் செலவாகவும் தருமாறு வேண்டியுள்ளனர். தமிழகஅரசு இத்தகைய பரந்த ஆராய்ச்சிக்கு எப்போதும் துணை நிற்பதால் மேற்கூறிய தொகைகளை மானியமாக வழங்க முடிவு செய்துள்ளது.

7. அறிவிப்புகள்

(அ) மேலவையில் நிறைவேற்றப்பெற்ற சட்டமுன் வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 5-4-1978 அன்று தமிழ் நாடு 1978-ம் ஆண்டு மோட்டார் வாகன வரி திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/78), பரிந்துரை ஏதும் இன்றி ஏற்பளிக்கப்பெற்றது என்றும், தமிழ் நாடு 1978ஆம் ஆண்டு அரிசன நல திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78), தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/78) ஆகியவை திருத்தங்கள் ஏதும் இன்றி ஏற்பளிக்கப்பெற்றது என்றும் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(8) அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41(3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,

''பேரவையின் 41 (3)-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு முன்பாக ஒரு அறிவிப்பு. இங்கே கொடுக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்புத் தீர் மானங்களுக்கான பதில்களை அச்சிட்டுக் கொடுத்துவிடலாம் என்று

1978 ஏப்ரல் 7] [திரு. ச. இராமச்சந்திரன்]

கருதுகிறேன். காரணம், அவைகள் எடுத்துக்கொள்ளப்பட நேரம் இல்லை. ஆகவே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான பதில்களை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப் படும். அவைகளுக்கான நேரம் எடுத்துக்கொண்டால், இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது பேச சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். ஆகவே தான் சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அச்சிட்டு அனுப்புவது என்ற முறை சரியல்ல. விதி 41, விதி 42-ன் கீழ் வருகின்ற பிரச்னைகளுக்கும், கேள்விகளுக்கு பதில் என்பதற்கும், அச்சிட்டு கொடுப்பது என்பது சரியாக இருக்காது. ஸ்டேட்மெண்ட் படித்த பிறகு அதன் மேல் வினாக்களை எழுப்பி மேற்கொண்டு விவரங்களை அறியவும், வினாக்களுக்கு துணை வினாக்கள் எழுப்பி கருத்துக்களை அறியவும் அது பயன் அளிக்காது. ஆகவே, அப்படிச் செய்யக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைத் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொள்கிறேன், உங்களுடைய உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசுவதை நிறுத்திக்கொண்டால் அனுமதிக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: அது வேறு, இது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றையும் அனுசரித்துத்தான் நாம் நடக்கவேண்டும். ஆகவே எனக்குக் கொஞ்சம் ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமேல் இன்னும் 12 பேர் பேச வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசி, பின்னர் அமைச்சர் பதில் சொல்லவேண்டும். இருப்பது 2 மணி நேரம் தான். அது போதாது.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, மிக முக்கியமான பிரச்னைகள் இருக்கின்றன. இஸ்மாயில் கமிஷன் மீது பேச வேண்டியதும் தவிர்க்கமுடியாத நிலையில் இருக்கிறது. இன்று முடியாவிட்டாலும், நாளைக்கு அதை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னிடத்தில் இல்லை. அப்படித் தள்ளுவது கடினம். எல்லாவற்றிற்கும் பதில் கொடுக்கச்சொல்லி விடுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்தாலும், நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைபற்றியும் பேசவேண்டும்.

[1978 ஏப்ரல் 7

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, நான் ஒரு முக்கியமான பிரச்னை பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன், உடனயாக அதைப்பற்றி நான் பேச விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாலை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாலையோ, நாளையோ இல்லை. இனி அதற்கு நேரம் இல்லை. எல்லாவற்றையும் இன்றைக்கே முடித்தாகவேண்டும். அதுவும் 1½ மணிக்குள் முடித்தாகவேண்டும். ஆகவே, அதற்கெல்லாம் பதில் அனுப்பி விடுகிறேன்.

[முற்பகல் 11-30]

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த அறிக்கைகளும் மிகவும் நீண்டதாக இருக்கின்றன. பொதுவான பிரச்னை என்னவென்றால் 41 ஆவது விதியின்கீழ் வரும்போது படித்தால் பலருக்கு பயனுடையதாக இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் புதுக்கோட்டையில் ஒரு தனியார் வெடிக்கிடங்கில் ஏற்பட்ட விபத்து பற்றியது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தில் எழுப்பினர் என்று தெரிந்தாலே தொகுதி மக்கள் ஆறுதலடைவார்கள். அதுமட்டுமல்ல; விவரங்களைத் தனியாக அனுப்பித் தருகிறோம். இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் நம்முடைய அலுவல்களை முடித்துக்கொள்ள வேண்டியிருப்பதால், இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் பலர் பேசவேண்டியிருப்பதால் பேரவைத் தலைவரவர்கள் என்னுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பெயரில் உள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மட்டும் படித்துவிட்டால் போதும்; பதில் அவர்களுக்கு வந்து சேரும்.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(9) கவன ஈர்ப்பு.

(அ) புதுக்கோட்டை, தெற்கு ராஜ வீதியில் உள்ள கடையில் ஏற்பட்ட வெடி விபத்தும், அதனால் ஏற்பட்ட பலர் உயிரிழப்பும் குறித்து.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதுக்கோட்டை நகரில் 5-2-78ஆம் தேதியன்று தெற்கு ராஜ வீதியில் உள்ள கடையில் ஏற்பட்ட வெடி விபத்தினால் 15—க்கும் மேற்பட்டோர்